# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, இலங்கை கருத்திட்ட முகாமையாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, திசெம்பர் மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2009 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, இலங்கை கருத்திட்ட முகாமையாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. கூட்.–1/2007*

**இலங்கை கருத்திட்ட முகாமையாளர் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*"இலங்கை கருத்திட்ட முகாமையாளர் நிறுவகம்" என அழைக் கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக் கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இதன் முன்னர் கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :* முன்னுரை.

*அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகம் எக்குறிக்கோள்களுக்கும், கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக் கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கான தாதலாலும் :*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, இலங்கை கருத்திட்ட முகாமையாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை கருத்திட்ட முகாமையாளர் நிறுவகத்தின் இப்போதுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப் பினராக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர் களாகவுள்ள அத்தனை ஆட்களும் "இலங்கை கருத்திட்ட முகாமையாளர் நிறுவகம்" என்ற பெயரின் கீழும், மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட *இலங்கை கருத்திட்ட முகாமையாளர் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.*

குழுவொன்றாதல் வேண்டும். அது (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அப்பெயர் கொண்டு வழக்குத்தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரம் உடைய தாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையில் கருத்திட்ட முகாமைத்துவத்தின் அறிவியலையும் செயற்பாட்டையும் முன்னேற்றுதலும் மேம்படுத்துதலும் ;

(ஆ) கருத்திட்ட முகாமைத்துறையில் உயர்தொழில்சார் அந்தஸ்தைப் பேணுதலும் ;

(இ) அறிமுகப்படுத்துகின்ற விரைவான தொடர்பாடல் முறைமைமூலமும் அவற்றின்மீதான கலந்துரையாடல் கள்மூலமும் தொழினுட்ப மற்றும் முகாமைத்துறை நூலகங்களைத் தாபித்துப் பேணுவதன்மூலமும் உயர்தொழில்சார் அக்கறையுள்ள வெளியீடுகளை வெளியிடுவதன்மூலமும் அத்தகைய வேறு வழிகள் மூலமும் கருத்திட்ட முகாமைத்துறையில் கல்விசார் மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சியையும் தொழினுட்ப அறிவையும் பெற்றுக்கொள்ளுவதிலும் பரிமாற்றஞ் செய்வதிலும் உதவுதலும் ;

(ஈ) கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பான ஆய்வை மேம்படுத்துதலும் மூல ஆராய்ச்சியை ஊக்கப்படுத் தலும் இலங்கையின் விஞ்ஞான மற்றும் பொருளா தார அபிவிருத்திக்கு வித்திடும் கருத்துடன் கருத்துப் பரிமாற்றத்துக்கும் பிரயோகங்களுக்கும், தீர்வுகளைக் காண்பதற்குமான நன்கு அங்கீகரிக்கப்பட்ட ஆய்வரங்க மொன்றை ஏற்பாடுசெய்தலும் ;

(உ) கூட்டுத்தாபன உறுப்பாண்மைக்கு அனுமதியளிக்கும் பரீட்சைகளை நடாத்துதலும் கருத்திட்ட முகாமையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் தகைமையைப் பரீட்சித்தலும் கருத்திட்ட முகாமைத்துவத்துறையில் தகுதிச்சான் றிதழ்களை வழங்குதலும் ;

(ஊ) உறுப்பாண்மையின் பல்வேறு தரங்களுக்கும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான தேர்வுநாடிகளின் தகைமைகளை மதிப்பிடுதலும் ;

(எ) கருத்திட்ட முகாமைத்துறையில் நல்லொழுக்க நெறி களையும் தராதரங்களையும் நற்சான்றுகளையும் பேணுதலும் ;

(ஏ) உயர்தொழில்சார் செயற்பாடுகளை ஒழுங்குபடுத் தலும் கருத்திட்ட முகாமைத்துறையில் உயர்தரா தரங்களைப் பேணுவதற்கு உதவுதலும் ;

(ஐ) கருத்திட்ட முகாமையின் எல்லா மட்டங்களிலும் கல்வி மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சியையும் இயைபான கல்வி மற்றும் தொழில் அபிவிருத்தியையும் ஊக்கு விப்பதற்காக பல்கலைக்கழகங்களுடனும் ஏனைய கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுதலும்;

(ஒ) அதன் உறுப்பினர்களினதும் பொதுமக்களினதும் நலன்கருதி அவசியமான கட்டிடங்களையும் பொருட் களையும் ஏற்பாடுசெய்து பேணிவருதலும் ;

(ஓ) நீதித் தீர்ப்பாளர்கள், நடுத்தீர்ப்பாளர்கள் ஆகியோர் மூலம் பிணக்குகளைத் தீர்ப்பதை ஊக்குவித்தலும் உதவுதலும் நீதித்தீர்ப்பாளர் மற்றும் நடுத்தீர்ப்பாளர் குழாம் ஒன்றைப் பேணிவருதலும் ; அத்துடன்

(ஔ) கருத்திட்ட முகாமை தொடர்பான ஏனைய பகிரங்க மற்றும் தனியார் ஒழுங்கமைப்புகளுடனும் தொடர்பு களை ஏற்படுத்தலும் பொது அக்கறையுள்ள விடயங் களில் ஒத்துழைத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, வங்கிக்கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்துதல் அல்லது மூடுதல், பிணைப்பொறுப்புடனோ பிணைப்பொறுப்பின்றியோ பணத்தைக் கடனாகப் பெறுதல் மற்றும் திரட்டுதல், மானியங்களையும் நன்கொடைகளையும் பெறுதல் அதன் நிதிகளை முதலீடுசெய்தல், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை ஈடுபடுத்தல் தொழிலுக்கமர்த்தல் மற்றும் பதவியிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்கான தத்துவம் உட்பட, கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களின் நோக்கங்களை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களை யும் விடங்களையும் செய்வதற்கான, புரிவதற்கான அத்துடன் நிறைவேற்றுவதற்கான தத்துவத்தை உடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக, தலைவர், உடனடிக் கடந்தகாலத் தலைவர், துணைத்தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், உதவிச் செயலாளர், பத்திராதிபர், உதவிப் பொருளாளர், உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்படும் ஏனைய விதிகளால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக பதவிதாங்குநர்களைக்கொண்ட பேரவை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் ஆரம்பமாகும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற நிறுவகத்தின் குழு கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையின் உறுப்பினர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து அதில் வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்குமாக அல்லது கருமங்களுள் எவற்றுக்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கமும், உறுப்பினர் களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும் விலக்குதலும் உறுப்பினர் இடாப்பில் சேர்க்கப்படவேண்டியவர் களின் விபரமும் ;

(ஆ) பேரவை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் பேரவை உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர் கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரின் தத்துவங் கள் மற்றும் கடமைகளும், பணிகளும் ;

(ஈ) பேரவைக் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடைமுறை, பேரவைக் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண் மற்றும் அதில் அலுவல் கள் கொண்டு நடாத்தப்படுதல் ;

(உ) கூட்டுத்தாபன ஆதனத்தின் நிருவாகமும் முகாமையும்; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபன அலுவல்களின் முகாமை யும்.

(2) ஆக்கப்பட்ட அத்தகைய விதிகள் ஒரே விதியைப் போன்றே, அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

*உறுப்பினர்கள் இடாப்பு.*

**7**. இச்சட்டம் ஆரம்பமாகும் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற ஒவ்வோராளும் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இதன்முன்னர் முறையாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற ஒவ்வோராளும் தமது பெயரையும் முகவரியையும் கூட்டுத்தாபனத்தின் விதிகளின்கீழ் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களையும் பதிந்து கொள்ளவேண்டிய இடாப்பொன்றைக் கூட்டுத்தாபனத்தின் பேரவை பேணிவரச் செய்வித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை கட்டணம் அல்லது மானியக்கொடை என்றவகையாகப் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பேரவை தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியில் ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத் தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) கூட்டுத்தாபனத்தின் பேரவையானது கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினங்களைப் பேணுவதற்கு முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளரால் ஆகக்குறைந்தது ஒவ்வொரு வருடத்திலும் ஒருதடவையாவது கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால், கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*நிறுவகத்தினால் செலுத்தப்படவுள்ள கடன்களும் நிறுவகத்துக்குச் செலுத்தப்படவுள்ள கடன்களும்.*

**10**. இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய தேதியன்று நிறுவகத்துக்குள்ள எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும். நிறுவகத்துக்குச் சேர்மதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படவுள்ள ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கெனக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*பணங்களையும் ஆதனங்களையும் பிரயோகித்தல்.*

**11**. எவ்விடத்திலிருந்தாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனங்களின் பணங்களும் ஆதனமும் இதனகத்து எடுத்துக்காட்டப்பட்ட அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம், இலாபம் என்றவகையில் அல்லது எத்தன்மைத்தாயினுமான வேறுவகையில் கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் ஆகாது.

*கட்டணங்களையும் ஒப்பப் பணங்களையும் விதிப்பனவு செய்வதற்குள்ள தத்துவம்.*

**12**. கூட்டுத்தாபனம் –

(அ) கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்படும் ஏதேனும் பயிற்சிநெறிக்கு அல்லது பரீட்சைக்குச் சேர்த்துக் கொள்வதற்கென, கூட்டுத்தாபனம் நியாயமானதெனக் கருதும் அத்தகைய கட்டணங்களையும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மையிலுள்ள எந்த வகுப்புக்கும் ஆட்களை அனுமதிப்பதற்கான கட்டணங்களையும் ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனம் அறவிட தோதானதெனக் கருதும் அத்தகைய ஒப்பப்பணங்களையும் கட்டணங்களையும், அறவிடுவதற்கு சட்டப்படி ஆற்றலும் தகுதியுமுடைய தாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பன வகையாக அல்லது வேறுவகையாக, அதற் குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதையேனும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப் படி ஆற்றலும் தகுதியுமுடையதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக் காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமையவும் விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத் துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்பட வேண்டுமென்பது.

**14.** கூட்டுத்தாபனத்தின், இலச்சினையானது, முகாமைச் சபையின் இரு உறுப்பினரது முன்னிலையிலல்லாமல் எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராக இடும் கையொப்பத்தினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

ஒழுக்காற்றுக் குழுக்கள்.

**15.** ஒழுக்காற்றுக் குழுக்களை நியமிப்பதற்கும் உயர்தொழில் தராதரங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் இலங்கையில் கருத்திட்ட முகாமையாளர்களாகத் தொழில்புரியும் அல்லது செயற்படும் ஆட்களிடையே ஒழுக்காற்றை முகாமைசெய்வதற்கும் காலத்துக் குக்காலம் அவசியமாகக் காணப்படக்கூடிய அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடைய தாகும்.

**16**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் செலுத்துமதிகளையும் கொடுத்துத் தீர்த்ததன்பின்னர், எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந் தளிக்கப்படுதல் ஆகாது, ஆனால் அது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்வதிலிருந்து அதன் விதிகளினால் தடுக்கப்பட்டுள்ளதும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ளதுமான ஒரு நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட லாம் அல்லது கைமாற்றப்படலாம். கூட்டுத்தாபனத்தின் உறுப் பினர்கள் கூட்டுத்தாபனத்தில் கலைத்தலின்போது அல்லது அத்தகைய கலைத்தலுக்கு முன்பு அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்களை அடையாளங்காணுதல் வேண்டும்.

கலைத்தல்.

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியற்குழுவினது அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**18**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*